| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி. ந.லதா<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர், (பொ)<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்,<br>(புதுச்சேரி மற்றும் காரைக்கால் நீங்கலாக) |

ந.க.எண்.005124 /டி(1) /2024 நாள் : 03.07.2024

ஐயா / அம்மையீர்,

பொருள் : தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்வு, ஜூலை 2024 – தேர்வு நாள் மாற்றம் – மாணவர்களின் விவரங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்திடக் கால அவகாசம் நீட்டித்தல் –தொடர்பாக.

பார்வை : இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 19.06.2024 மற்றும் 25.06.2024

*****

பார்வையில் காணும் இவ்வலுவலகக் கடிதத்தில், 21.07.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறவுள்ள "தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்விற்கு" விண்ணப்பிக்க விரும்பும் **மாணாக்கர்களின்** விவரங்களை சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக 26.06.2024 பிற்பகல் முதல் 03.07.2024 வரை பதிவேற்றம் செய்திட கால அவகாசம் வழங்கப்பட்டது. தற்போது இக்கால அவகாசம் 10.07.2024 வரை நீட்டிக்கப்படுகிறது.

**மேலும் 21.07.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறவிருந்த "தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்வு 04.08.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறும்** என்ற விவரத்தினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து அரசு மே;ல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தெரிவித்து அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் விண்ணப்பிக்க **ஊக்குவிக்குமாறு** தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஓம்/–
இயக்குநர்(பொ)

நகல். அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

(தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது)